## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு S. மணிகண்டன் என்பவரின் பணியினை 11.04.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மை (வேநி9) துறை

**அரசாணை (3டி) எண் 133**

**நாள்: 01.07.2020**
**சார்வரி வருடம்,**
**ஆனி திங்கள் 17,**
**திருவள்ளுவர் ஆண்டு 2051**

**படிக்கப்பட்டது:-**

1. அரசாணை (நிலை) எண் 100, பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி5 / 142910 / 2019, நாள் 02.01.2020.
3. அரசாணை (நிலை) எண் 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.

******

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை, தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்களின் கட்டுப்பாட்டில், வேலூர், வேளாண்மை உதவி செயற்பொறியாளர் (வேபொ) அலுவலகத்தில் முதுநிலை உழுவை ஓட்டுநராகப் பணிபுரிந்து வந்த போது 15.02.2009 அன்று பணிக்காலத்தில் காலமான அமரர் பி. சுப்பிரமணியன் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு/மகன் திரு S. மணிகண்டன் என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து, வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 27182 / 2017, நாள் 28.02.2018–ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக தற்காலிகமாக பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டு, அவ்வாறே வேலூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்தும், வேலூர், வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் ஆ3/2669/2018, நாள் 03.04.2018–ன்படி தனியர், வேலூர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் 11.04.2018 முற்பகல் இளநிலை உதவியாளர் (பிஅ) ஆகப் பணியில் சேர்ந்துள்ளார் என்றும், அன்னாரின் பணியினை 11.04.2018 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு அரசிடம் வேளாண்மை இயக்குநரால் கோரப்பட்டுள்ளது.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுகிறது என ஆணையிடப்பட்டுள்ளது.

3. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக (பிணையமற்றது) பணி நியமனம் செய்யப்பட்ட திரு S. மணிகண்டன் என்பவரது பணியினை 11.04.2018 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆகப் பணி நியமனம் செய்யப்பட்ட தனியரின் பணி 11.04.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், தனியர் இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த ஆண்டு ஊதிய உயர்வுக்குத் தகுதியுடைவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறையின் அ. சா. எண் 2980 / க்யூ.1 / 2020–2, நாள் 02.06.2020 மற்றும் பணியாளர் (ம) நிருவாக சீர்த்திருத்தத்துறையின் அ. சா. எண் 13556 / ஜி2 / 2020, நாள் 06.06.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5 (இ).
திரு S. மணிகண்டன், இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)
<u>வழி:</u> வேளாண்மை இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–5.
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை–1), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வு தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.

**நகல்**
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத்துறை, சென்னை–9.
தொடர்புடைய கோப்பு எண் 677 / வேறி9 / 2020
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

பே.இ.எண்: அ2/2669/18, நாள் 14-9-2020

**// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //**

ஆட்சி அலுவலர்
வேளாண்மை இணை இயக்குநர்
அலுவலகம், வேலூர்

பிரிவு அலுவலர்